## இந்தியா பௌண்டேசன் பார் தி ஆர்ட்ஸ் (ஐ.எ.ஃப்.ஏ)

## தன் கலைப் பயில்வுத் திட்டத்தின்கீழ்

## கருத்துப்பட்டறைகள், கலைஞர் வதிவிடங்கள் (Residencies)

## ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது

## வருடம் முழுதும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

கலைப் பயில்வுத் திட்டம் (Art Practice Programme) கலைஞர்கள் தங்களின் தற்போதைய பயில்வுகளின் வீச்சுக்களை, பரப்பெல்லைகளைப் புதிய நோக்கில் விரிவுபடுத்த உதவும் வேலைத்திட்டங்களைச் (projects) செயற்படுத்த முற்படுகின்றது. இத்திட்டங்கள் மரபாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளைக் கேள்விக்குட்படுத்துவதாகவோ, வடிவம், உள்ளடக்கம், ஊடகம் போன்றவற்றில் புதிய எல்லைகளை நகர்த்தக்கூடியதாகவோ, வெளி, பார்வையாளர்கள், சமூகங்கள் ஆகியவற்றின் மீதான ஈடுபாடுகளில் புதிய அணுகுமுறைகளைக் கண்டறியக்கூடியதாகவோ, சோதனை முயற்சிகளை வெளிப்படுத்தக் கூடியதாகவோ அமையலாம்.

### கருத்துப்பட்டறைகள் மற்றும் கலைஞர் வதிவிடங்கள்

வரலாற்று ரீதியில், வெவ்வேறு புலங்களைச் சேர்ந்த கலைஞர்கள் ஒன்றாகக் கூடி விவாதித்த தருணங்களில் கலைப்பயில்வு முறைகளில் குறிப்பிடத்தக்க சிந்தனைப்போக்குகள் தோன்றின. இக்கூடுகைகளில் பங்கெடுக்கும் கலைஞர்கள் வெவ்வேறு வட்டாரம் / பகுதிகளைச் சார்ந்தவர்களாகவோ அல்லது வெவ்வேறு தலைமுறைகளைச் சார்ந்தவர்களாகவோ இருக்கலாம். கலைஞர்கள் தங்களின் கலைநுட்பங்கள், கருத்துக்கள் போன்றவற்றின்மீது விவாதித்து, அவற்றை மேம்படுத்தலாம். இவற்றில் புதுமையையும் ஏற்படுத்தலாம். இன்று, கலைப்பயில்வினை பயில்பொருளாக்குகின்ற அல்லது பிரதிபலிக்கின்ற கருத்துப்பட்டறைகள், கலைஞர் வதிவிடங்கள் போன்றவை ஒருமித்த சிந்தனைகளைக் கொண்ட கலைஞர்களை ஒருங்கிணைக்கும் கூடுகைகளுக்கான முக்கிய வெளிகளாகப் பரிணமிக்கின்றன. இத்தகைய கலைக்கூடுகைகள் இதுவரை யாரும் பார்த்திராத ஆற்றல்களின் சங்கமிப்பாக விளங்குவதோடு, கலைப்பயில்வுகள் எவ்வாறு உருவாகின்றன? அவை எதை நோக்கிப் பயணிக்கின்றன என்பதைப் பற்றிய தேடல்களாகவும் அமைகின்றன. அவ்வகையில் இந்நிகழ்வுகள் இதுவரை கேட்கப்பட்டிராத குரல்களுக்குச் செவிமடுப்பதற்கான தளங்களாகவும் உருவெடுக்கின்றன.

கலைப்பயில்வுத் திட்டத்தின்கீழ் கருத்துப் பரிமாற்றம், உரையாடல், விவாதம், கற்றல், வழிநடத்தல் (mentorship) போன்றவற்றை ஊக்குவிக்கக்கூடிய சூழல்களை உருவாக்கும் திறன் கொண்ட **கருத்துப் பட்டறைகள் மற்றும் கலைஞர் வதிவிட**ங்களுக்கான திட்டமுன்வரைவுகளை (proposals) வரவேற்கின்றோம். இத்தகைய வேலைத்திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம். கலைஞர்களைச் செழுமைப்படுத்த உதவுகின்ற, கூட்டுப் படைப்பாக்கத்தை ஊக்குவிக்கின்ற, பரிசோதனைகளுக்குத் துணை புரியும் வகையிலான கலைஞர் வதிவிடங்கள்; கலை குறித்த அறிவை வளர்த்தெடுக்கவும், புதிய பார்வைகளை உருவாக்கவும் கலைப்பயில்வுகளை விரிவுபடுத்தவும் உதவும் வகையிலான கருத்துப் பட்டறைகள் அல்லது இவை போன்ற வேறு வடிவிலான கூடுகைகள் முதலியவற்றை ஒழுங்கமைத்தல்.

**வேலைத்திட்டத்தின் கால அளவு:** ஆறு மாதங்கள் வரை

**வரவு செலவுத் திட்ட அளவு:** அதிகப்படியாக ரூபாய் 3,00,000 வரை (மொத்த வரவுசெலவுத்திட்டத்தில் 30%க்கு மிகாமல் மதிப்பீட்டுத்தொகை கோரலாம்).

**விண்ணப்பக் காலம்:** ஒரு வருடத்தில் எப்போது வேண்டுமானாலும் திட்டமுன்வரைவுகளை அனுப்பலாம்

## யார் யாரெல்லாம் திட்டமுன்வரைவுகளை அனுப்பலாம்?

ஒரு கலைப்புலம் சார்ந்தோ அல்லது பல்வேறு புலங்களின் ஊடாகவோ இயங்குகின்ற கலைஞர்களிடமிருந்து இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அவை பின்வரும் கலைப்பயில்வுகள் மற்றும் கலைஞர்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

- இசை, ஒலி, பனுவல், நடனம், உடலியக்கம், நாடகம், பாவைக்கூத்து, கதைசொல்லல், மாயவித்தை (magic), சர்க்கஸ், இன்னும் பிற நிகழ்த்துக்கலைகள் சார்ந்த நிகழ்த்து கலைஞர்கள்.
- திரைப்படம் (ஆவணப்படம் மற்றும் புனைவுப்படம்), சலனச் சித்திரம் (animation), புகைப்படம், நிறுவல் கலை (installation), புது ஊடகக் கலை (new media), செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், ஊடாட்டக்கலைகள், கணினி ஊடக விளையாட்டு (gaming), ஓவியம், சிற்பம், அச்சுக் கோர்த்தல், சித்திரப் புத்தகம், வரைகலை படக் கதைகள், கலைஞர் புத்தகம் இன்னும் பிற காண்பியக் கலை வடிவங்கள் சார்ந்து இயங்கும் காண்பியக் கலைஞர்கள்
- கலைக்காட்சிக் கூடங்களுக்கு வெளியே இயங்கும் எடுத்தாளுனர்கள் (curators).
- இலக்கியப்படைப்புகளுடன் இயங்கும் கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள், நாடக ஆசிரியர்கள்
- பல்துறைப் படைப்பாக்கங்களில் ஈடுபட்டுள்ள கலைப்பயிற்றுநர்கள், கலைஞர்கள்

## தகுதி:

இந்தியக் குடிமக்கள் அனைவரும் திட்ட முன்வரைவுகளை அனுப்பத்தகுதியுடையவர்கள். விண்ணப்பிப்பவர்கள் மட்டுமல்லாது அவர்களுடன் சேர்ந்து இத்திட்டங்களில் உடனியங்க இருக்கும் பிற பங்கேற்பாளர்களும் இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு, இங்கே சொடுக்கவும்.

## திட்ட முன்வரைவுகளை அளிக்கை செய்வது தொடர்பான வழிகாட்டுதல்கள்

தங்களின் முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் ஆகியவற்றை உள்ளடக்கிய தன்விபரக்குறிப்பினையும் பின்வருவனவற்றை விளங்கப்படுத்தும் வகையிலான திட்டமுன்வரைவினையும் எங்களுக்கு அனுப்புங்கள்.

- ஒரு கலைச்செயல்பாட்டாளராக உங்களின் தற்போதைய கலைப்பயில்வு / காட்சிப்படுத்துதல் தொடர்பான அக்கறை, விருப்பங்கள்

- நீங்கள் முன்மொழியும் கருத்துப் பட்டறை / கலைஞர் வதிவிடத்திற்கான விருப்பம் / வேட்கை
- முன்மொழியப்படும் கருத்துப் பட்டறை / கலைஞர் வதிவிடத்திற்கான கருப்பொருள்
- முன்மொழியப்படும் கருத்துப் பட்டறை / கலைஞர் வதிவிடக் கருப்பொருள் குறித்த விரிவான கருத்துருவாக்கம்
- பங்கேற்பாளர்கள் / இணைச்செயல்பாட்டாளர்கள் போன்றோர் பெற இருக்கும் அனுபவம்
- முன்மொழியப்படும் கருத்துப் பட்டறை / கலைஞர் வதிவிடத்திற்கான அணுகுமுறைகள்
- விரிவான வரவுசெலவுத் திட்ட அறிக்கை, திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காலவரிசை விபரங்கள்
- இத் திட்ட முன்வரைவுடன் தொடர்புடைய முந்தைய படைப்புகளின் சான்றுகள்

ஆங்கிலம் உட்பட எந்த இந்திய மொழிகளிலும் உங்களின் திட்ட முன்வரைவுகளை எழுதலாம். ஆங்கிலத்தை விட, பிற இந்திய மொழிகளில் திட்ட முன்வரைவுகளை எழுத ஐ.எ.ஃ.ப்.ஏ ஊக்கப்படுத்துகின்றது.

திட்ட முன்வரைவுகள் குறித்த உங்களின் எண்ண ஓட்டங்கள், ஐயங்கள் ஆகியவை பற்றிய ஐ.எ.ஃ.ப்.ஏ. அலுவலரின் எதிர்வினையை அறிந்துகொள்ள அவற்றை எழுத்து வடிவிலோ, ஒலி அல்லது காட்சி வடிவிலோ எங்களுக்கு அனுப்பலாம்.

உங்களின் திட்ட முன்வரைவுகளைக் கலைப்பயில்வு – திட்ட அலுவலரான ஜான் சேவியர்ஸ்க்கு இணைய வழியாக john@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரியில், **Project Proposal for Workshops/Residencies (Arts Practice)**, எழுதுங்கள். உங்களின் திட்ட முன் வரைவுகள் தொடர்பான ஏதேனும் கேள்விகள் இருந்தாலோ விளக்கங்கள் தேவைப்பட்டாலோ, மேற்குறித்த மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள்.

**தேர்ந்தெடுக்கப்படும் அனைத்துச் செயல்திட்டங்களும் ஐ.எ.ஃ.ப்.ஏ.வினால் செயல்படுத்தப்படும்.**

**குழந்தைகள் உட்பட அனைவரையும் ஆதரிக்கக்கூடிய, மதிக்கக்கூடிய, பாதுகாக்கக்கூடிய பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் ஐ.எ.ஃ.ப்.ஏ. உறுதி பூண்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பதாரர்கள் இந்நோக்குடன் ஒத்துப்போக வேண்டும் என்பதோடு எப்போதும் அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.**